தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வன மரபியல் நிறுவனத்தில் நேரலையில் பூமி நாள் விழா

**கோவை, ஏப்.25–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் பூமி நாள் விழா நடந்தது. கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பேஸ்புக் நேரலையில் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

முனைவர் கண்ணன் வாரியர் பேசுகையில், ''புதிய உயிரியல் நோய்கள் பல, வன அழிப்பு போன்ற நில பயன்பாட்டின் மாற்றங்களிலிருந்து உருவாகின்றன என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். மனித நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்து, உலகளவில் 46 சதவீதம் மரங்களை அழித்து விட்டோம். ஆண்டுக்கு 1500 கோடி மரங்களை இழக்கிறோம். விரைவில் 10 லட்சம் தாவர மற்றும் விலங்கு இனங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன,'' என்றார்.

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன் துவக்கி வைத்து பேசுகையில், ''காற்று, நீர், மண், தாதுக்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் உள்ளிட்ட பூமியின் இயற்கை வளங்களை, சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பு என்பது இந்த வளங்களை கவனித்துக்கொள்வதே ஆகும். இதனால் அனைத்து உயிரினங்களும், அவற்றிலிருந்து பயனடையும்,'' என்றார்.

மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்காக, ஆன்லைன் விழிப்புணர்வு வினாடி வினா நடத்தப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும் இ–சான்றிதழ் வழங்கினர். விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது. 'என்விஸ்' திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

275. News in Dinamalar, 25.04.2021, Coimbatore, observance of Earth Day by IFGTB ENVIS.